**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 11 / 2019** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | திருமதி. அமுதா |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.06.2024**

எதிரி4 ஆஜர். எதிரிகள் 1 முதல் 3,5,6, ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சேடப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.05.2017 ம் ஆண்டு பேரையூர் வட்டம், மங்கள்ரேவு கிராமத்தில், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். அன்று காலை 09.00 மணியளவில் நான் எங்கள் அலுவலகத்தில், பணியில் இருந்த போது, எங்கள் கிராம உதவியாளர் திருமதி.இரஞ்சிதம் என்பவர் என்னிடம் வந்து, வீராளம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பெரியகார்த்திகேயன் மகள் சுகன்யா என்பவர் ஈரோட்டில் தனியார் மருத்துவமனையில் நர்சாக பணி செய்து வந்தார் என்றும் அவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக ஈரோட்டைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மகன் பூபதி என்பவரைக் காதல் திருமணம் செய்து கொண்டதாகவும், சுகன்யாவின் தந்தை பெரியகார்த்திகேயன், அவரது

சகோதரர்களான பாண்டிகண்ணன், சுந்தரம், அவரது அத்தை லெட்சுமி ஆகியோர்கள் மங்கள்ரேவு கிராமத்தில் நடக்கும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிக்காக சுகன்யா, பூபதி, மற்றும் அவரது பாட்டி பொன்னம்மாள் மூவரையும் 14.05.2017 அன்று வீராளம்பட்டிக்கு கூட்டி வந்திருந்ததாகவும், (சாட்சி தற்போது 14.04.2017 என்று கூறுகிறார்,) 15.04.2017 அன்று அதிகாலை 01.00 மணியளவில் பூபதியையும் அவரது பாட்டியையும் மிரட்டி விரட்டி விட்டு, சுகன்யாவை வீராளம்பட்டியில் வைத்து, சர்வே எண். 7ல் அமைந்துள்ள ஓடையில் யூரியா கலந்த தண்ணீரைக் கொடுத்து கொலை செய்து, கொலையை மறைக்கும் நோக்கத்துடன் டயரை வைத்து எரித்ததாக ஊர்மக்களிடம் தகவல் கிடைத்து, எனது கிராம உதவியாளர் இரஞ்சிதம் அந்த இடத்தைப் பார்வையிட்டு வந்து என்னிடம் கூறினார். பின்பு நானும் எனது உதவியாளர் இரஞ்சிதமும், அந்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது, அங்கு எரிக்கப்பட்ட நிலையில் சாம்பலும், சிறு துகள்களாக எலும்பும் கிடந்ததைப் பார்த்து, இது தொடர்பாக சுகன்யாவின் தந்தை, அவரது தாய் செல்லம்மாள், சகோதரர் பாண்டிக்கண்ணன், சுந்தரம், சின்னச்சாமி, மற்றும் அவரது அத்தை லெட்சுமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு சேடபட்டி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் அளித்தது தான். **அந்த புகார் மனு அதசாஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

எனது அலுவலகம் மங்கள்ரேவு கிராமத்தில் உள்ளது. நான் மதுரை மாவட்டம் T கல்லுப்பட்டியில் குடியிருக்கிறேன். மங்கள்ரேவுக்கும் T கல்லுப்பட்டிக்கும் இடையே சுமார் 8 கிமீ தூரம் இருக்கும். எனது உதவியாளர் இரஞ்சிதம் என்பவர் மதுரை பேரையூர் சாப்டுரில் வசித்து வருகிறார். மங்கள்ரேவுக்கும் சாப்டுருக்கும் இடையே 10 கிமீ தூரம் இருக்கும். பொதுவாக காலை 08.00 மணிக்கு அலுவலகத்திற்கு வந்துவிடுவேன். நான் முதல் விசாரணையில்

குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளையும், எனது கிராம உதவியாளர் இரஞ்சிதம் என்னிடம் சொன்னார். சுகன்யாவிற்கும் பூபதிக்கும் நடந்த திருமணம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. எனவே, அந்த திருமணம் எந்த தேதி நடந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இரஞ்சிதம் என்னிடம் சொன்ன தகவலை, இரஞ்சிதத்திடம் எழுத்து மூலமாகக் கேட்டுப் பெறவில்லை. 14.04.2017 ம் தேதி சுகன்யாவையும், அவரது கணவர் பூபதி மற்றும் பாட்டி பொன்னம்மாளையும் வீராளம்பட்டிக்கு அழைத்து வந்துவிட்டு, 15.04.2017 ம் தேதியன்று சம்பவத்தை செய்ததாக எனது உதவியாளர் இரஞ்சிதம் என்னிடம் கூறியதில் இருந்து, இந்த சம்பவத்தை நேரடியாகப் பார்த்த சாட்சிகள் மூலம் தெரிந்து, அவ்வாறு என்னிடம் சொல்லியுள்ளார் என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு நேரடியாக சம்பவத்தைப் பார்த்த சாட்சி யார் என்று எனது உதவியாளர் இரஞ்சிதம் என்னிடம் தெரிவிக்கவில்லை. அந்த நேரடி சாட்சிகள் யார் என்று மங்கள்ரேவு கிராமத்தில் விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவ்வாறு நான் தெரிந்து கொண்ட, கண்ணுற்ற சாட்சிகளை குறிப்பிட்டு, அதசாஆ.1 புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நேரடியாகப் பார்த்த சாட்சிகளைக் குறிப்பிட்டு அதசாஆ.1 ல் சொல்லாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் கிடையாது. அதசாஆ.1 புகார் மனுவைப் பெற்றுக் கொண்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கு எனக்கு அந்த முதல் தகவல் அறிக்கையின் நகலை ஆய்வாளர் எனக்கு இலவசமாக வழங்கினார். அதைப் பெற்றுக் கொண்டதற்கு, அந்த முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் செய்துள்ளேன். நான் கையொப்பம் செய்து பெற்றுக்கொண்ட முதல் தகவல் அறிக்கையை தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டவில்லை. நான் கிராம நிர்வாக அலுவலராக இருப்பதால், நான் போலிசுக்கு புலன்விசாரணைக்கு உதவியாக இருக்க வேண்டும் என்றால் சரிதான். அதனால் புகார் கொடுத்தால், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதன் நகல் எனக்கு வழங்கப்படும்

என்று எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் நகலைப் பார்த்தால் தான், அதசாஆ.1 புகார் மனுவைத்தான் நான் போலிசில் கொடுத்தேனா என்று தெரியவரும் என்றால் சரிதான். அதசாஆ.1 புகார்மனுவை நான் சேடபட்டி காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். சேடபட்டி காவல்நிலையத்திற்கு காவல் ஆய்வாளர் உள்ளார் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார், சேடப்பட்டி காவல் நிலைய ஆய்வாளருக்கு முகவரியிட்டு கொடுத்தேன். சேடப்பட்டி காவல் நிலையத்திற்கு எனது உதவியாளர் இரஞ்சிதம் என்பவரை உடன் அழைத்துச் சென்றேன். எனக்கு, எனது கிராம உதவியாளர் மூலம் தான், நான் சொன்ன தகவல் தெரிந்ததால், எனது உதவியாளர் சாட்சி கையொப்பம் போட்டு தான் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் அளித்த பின்னர் நான் காவல் நிலையத்தில் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். போலிசாரை அழைத்துக் கொண்டு, நான் சம்பவ இடத்திற்குச் சென்றோம். நான், காவல் ஆய்வாளர் மற்றும் உதவியாளர், போலிசார் அனைவரும் சம்பவ இடத்திற்குச் சென்றோம். வீராளம்பட்டி கிராமத்திற்க்கும் மங்கள்ரேவு கிராமத்திற்கும் இடையே சுமார் 1 கிமீ தூரம் இருக்கும். வீராளம்பட்டி கிராமத்திலும், மங்கள்ரேவு கிராமத்திலும், பல குடும்பங்களும், பல சமூகத்தைச் சேர்ந்தவர்களும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். பெரியகார்த்திகேயன், பாண்டிக்கண்ணன், சுந்தரம் மற்றும் சுகன்யாவின் அத்தை லெட்சுமி ஆகியோர் வீட்டிற்கு, சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்டவுன் நான் செல்லவில்லை. போலிசார் வந்தபின்பும், அவர்களை அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டிற்கு நான் செல்லவில்லை. மங்களரேவு கிராமத்திற்கு அருகாமையில் வண்டி சென்ற டயர் தடம் காணப்பட்டதா என்றால் ஆட்டோ சென்றதற்கான தடம் காணப்பட்டது. அந்த டயர் மார்க்கை போலிசார் புகைப்படம் எடுத்தார்கள். போலிசார் வந்த பிறகும், சம்பவம் நடந்த இடத்தில் இருந்து எந்த தடயங்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எனது உதவியாளர் இரஞ்சிதம்

தகவல் சொன்னவுடன், மேற்படி தகவல் அவரிடம் என்னைக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று நான் அவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் புகாரில், புகார் கொடுப்பதற்கு 25 நாட்களுக்கு முன்பாக, சம்பவம் நடந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த 25 நாட்களில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மங்கள்ரேவு கிராமத்தின் சர்வே எண்.7 என்பது, ஓடை ஆகும். அதற்கு அருகே அந்த கிராமத்தைச் சேர்ந்த பல நபர்களின் நிலங்கள் உள்ளது. அந்த நிலத்தின் உரிமையாளர்களையோ, விவசாயம் செய்பவர்களையோ யாரையும் நான் விசாரணை செய்யவில்ல. விவசாய வேலை செய்வதால் அந்த பகுதியில் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். நான் ஒரு புகார் அளிக்க வேண்டும் என்று சொன்னால், கிராம நிர்வாக அலுவலர் கையேட்டின் படி, ஒரு அசலும், 2 நகலும் மொத்தம் 3 மனு தயார் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். அதில் ஒரு நகலை நான் வைத்துக் கொள்வேன் என்றும் மற்றொன்றை தாசில்தாருக்கும், ஒரு மனுவை காவல் நிலையத்திலும் கொடுப்பேன் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து, போலிசாரை அழைத்துச் சென்று சம்பவ இடத்தில் போலிசாருடன் நான் சுமார் ½ மணி நேரம் இருந்தோம். மோப்பநாய் அழைத்து வந்திருந்தார்கள். நான் சொன்னது போல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், எனது உதவியாளர் இரஞ்சிதம் என்னிடம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்தத் தகவலைப் பெற்று, அதன் அடிப்படையில் அதசாஆ.1 புகார் மனுவை நான் தயார் செய்தேன் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில், போலிசார் வழக்கு பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதசாஆ.1 புகாரினை பின்னிட்டு தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. குப்பல்நத்தம் கிராம நிர்வாக அலுவலர் திரு.இளங்கோவன் அவர்களை எனக்குத் தெரியும். குப்பல்நத்தம்

கிராமத்திற்கும், மங்கள்ரேவு கிராமத்திற்கும் இடையே சுமார் 4 கிமீ தூரம் இருக்கும். நான் புகார் அளித்த அன்று, கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில், திரு.இளங்கோவன் அவர்களும் வந்திருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் உள்ள அசல் முதல் தகவல் அறிக்கையில் எனது கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை